RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1356

OPEN ACCESS

# அகத்திணையில் குறிஞ்சித்திணைக் கோட்பாடுகள்

ந. இந்திரா [அ, *], இரா. கலைச்செல்வி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம்-637401, தமிழ்நாடு, இந்தியா

# The Principles of Kurinjithinai in Agathinai

N. Indira [a, *], R. Kalaiselvi [a]

[a] Department of Tamil, Thiruvalluvar Government Arts College, Rasipuram-637401, Tamil Nadu, India

* Corresponding Author: indiratamilphd@gmail.com

Received: 28-05-2022
Revised: 13-09-2022
Accepted: 27-09-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Thinai refers to the land, which is the primary object and the focus of the activities of the people. In addition to stating the governance details and material conditions, it also categorizes the objects and gives explanations accordingly. It will classify how literary material is situated, and the race will separate and specify its meanings. The study of Kurinjithinai theory has briefly examined the Thinai, the doctrines of the Thinai, the history of the Kurinji land, the reasons for the names, the hill stations, and the first theme, the theme, etc. In this, the information about Thinai is clearly mentioned. The names of the hill land and the land of Kurinji are mentioned in detail. In addition, the article contains the principles of the life of the ancient Tamils, such as the Mutharporul (five elements and time), the Karupporul (fourteen subject matters that include God), and the Uripporul (morals performed by people). Therefore, it clearly mentions the information about Thinai.

**Keywords:** Kurinjithinai, Thinai, Kurinji land, Uripporul, Agathinai

## முன்னுரை

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மொழி தமிழ் மொழியாகும். “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தக்குடி” என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுவதின் வாயிலாக தமிழின் பழமையை உணரலாம் (Sivamani, 2022). தொல்காப்பியரைப் பொறுத்த வரையில் திணைக்கோட்டு உருவாக்கம் என்பது குழுச் சமூகத்தின் திணைசார் வாழ்வியலான வாய்மொழிப் பதிவுகளை இலக்கண விதிகளுக்கு உட்படுத்தித் திட்ட ஒழுங்கமைவுக்குள் கொண்டுவந்து பதிவு செய்வதற்கான கருவியாக ஒரு கோட்பாட்டினை உருவாக்குதல் என்பதாகும். தமிழின் ஆதிகாலப் படைப்பான சங்க இலக்கியம் வாயிலாக சில முக்கியக் கருதுகோள்களைப் பார்க்க முடிகிறது. மேலும் நிலம் சார்ந்த மக்களின் வாழ்க்கையைத் திணை மரபு என்று கட்டமைகிறது. அகம், புறம் என்கிற பாகுபாடுகளோடு இயங்கிய பாட்டும் தொகையும் சங்க இலக்கியம் எனப் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பாகும்.

## திணை விளக்கம்

திணை என்பது முதற்பொருளான நிலத்தையும், மக்களின் நடவடிக்கைகளையும் குறிக்கும் (Vijayalakshmi, 2020). ஆளுகை விவரங்கள், பொருள் நிலைகள் இவற்றைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் பொருள்களை வகைப்படுத்தி அவற்றிற்கேற்ப விளக்கங்களையும் தரும். இலக்கியப் பொருண்மைகள்

எவ்வாறெல்லாம் அமைந்துள்ளன என்பதை வகைப்படுத்துவதோடு இனம் பிரிந்து அதன் பொருட்களையும் குறிப்பிடும். திணை என்ற சொல் வீடு, நிலம், திண்ணை, இடம், குடி, குலம், ஒழுக்கம், பாடல், சூழலமைதி, ஐந்திணை ஆகிய பொருள்களில் வரும் நிலப்பகுதிகளில் நிலைத்துத் தங்கி வாழ மனிதன் ஆங்காங்கே இயற்கைச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வைத் தொடங்கினர் (Ganeshwari, 2021).

## திணை இலக்கியம்

திணை என்பதைச் சூழல், புனைவு என்று அழைக்கலாம். இறுதிச் சூழல் புனைவு திணைப்பாகுபாட்டிற்கு வழிவகுத்தது. இயற்கைச் சூழலில் தோன்றிய தமிழிலக்கிய நில அடிப்படைக் கூறுகளுடனும் இயல்புகளுடனும் திணை இலக்கியம் என நிலவழிப்பட்ட இலக்கியமாகத் தோன்றி வளர்ந்தது. நிலப்பகுதிகளில் நிலைத்துத் தங்கி வாழத் தலைப்பட்ட மனிதன் ஆங்காங்கே இயற்கைச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு தமது வாழ்வை அமைத்துக் கொண்டான். அவரவர் வாழ்ந்த நிலத்தியல்பு அவரவர் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் நிலைமைக்கேற்ப அவரவர் வாழ்வியல் நிலைகளும் வேறுபட்டு அமைத்தனர். ஐந்து நிலங்களின் வரலாற்று முறையிலான நிலவியல் வளர்ச்சி திணை இலக்கியம் தோன்ற வழிவகுத்தன. திணை இலக்கியமாவது நிலமும், பொழுதும் இயற்கையைப் பின்னணியாகக் கொண்ட மனித வாழ்வினைப் புனைவதாகும். நிலச்சாயல், உயிரின சாயல், மனிதச்சாயல் போன்றவை ஓவியமாகப் படிந்து கிடக்கும். உணர்வையும், புனைதிறனையும் நாடக வடிவமைப்பினையும் பெற்றது. தொன்மையான தமிழ் மக்கள் குன்றுகளிலிருந்தும் காடுகளிலிருந்தும் வளமான சமவெளிப் பகுதிக்கும், கடற்கரைப் பகுதிக்கும் இடம் பெயர்ந்த வளர்ச்சி நிலையினைத் திணை இலக்கியம் குறிப்பிடும். திணை பற்றிய செய்திகளைக் கூறும் திணை இலக்கியங்கள் நாகரிகத்தின் வளர்ச்சியின் அடையாளங்களாகும். திணைக் கண்ணோட்டமானது மக்கள் இடப் பெயர்வின் படி நிலைகளோடு இடம் பெயர்ந்த மக்கள் இனக்குழுவாக வாழ்க்கை நடத்தினர் இதனை மானிடவியல் நோக்கில் பார்த்தால் அந்நிலங்களின் வளர்ச்சியே இனக்குழு வாழ்க்கைக்குச் சான்றாதாரமாகிறது. அகமும், புறமுமாய் அமைந்த பழந்தமிழ்ப் பாடல்களைச் சங்க இலக்கியம் எனப் பெயரிட்டு அழைப்பதை விட திணை இலக்கியம் என அழைப்பது பொருத்தமுடையதாகும்.

## அகத்திணைக் கோட்பாடு

ஒவ்வொரு திணைக்கும் உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய இவை மூன்றும் சிறந்து அமையும்போது அந்தத்திணைப்பாடல் உருவாகும் என்பதுதான் தொல்காப்பியர் சுட்டும் திணைக்கோட்பாடு. தொல்காப்பியர் திணை மயக்கத்தினைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது நிலம் மயங்குதல் இல்லை எனவே காலம் மயங்குதல் உண்டு என இளம்பூரணர் குறிப்பிடுகிறார். திணை என்பது முதல், கரு, உரிப்பொருள்கள் ஆகிய மூன்றையும் உள்ளடக்கியது. ஆனால் மூன்றும் மயங்கப்பெறும் என்பார் நச்சினார்க்கினியார். தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாடு என்பது குறிஞ்சித் திணைக்குரிய ஒரு பாடல் என்றால் அப்பாடலில் குறிஞ்சித் திணைக்குரிய மலை நிலம், கூதிர், யாமம் முதலிய பொழுதுகள், புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய ஒழுக்கம், குறிஞ்சி நிலத் தெய்வம் முதலிய கருப்பொருள்கள் அமைந்தால் அப்பாடலைக் குறிஞ்சித்திணைப்பாடல் எனலாம்.

இந்த அமைப்பு பிற திணைப்பாடல்களுக்கும் பொருந்தும். ஒரு திணைப் பாடல் என்றால் அதில் முதல், கரு, உரிப்பொருள்கள் மூன்றும் சிறந்து அமையும் போது தான் அகப்பாடல்கள் முழுமை பெறும் என்பது தொல்காப்பியர் குறிப்பிடும் திணைக் கோட்பாடாகும்.

## திணைக் கோட்பாடு

- ஒவ்வொரு திணைக்கும் உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் சிறந்து அமையும் போது திணைக் கோட்பாடு உருவாகும்.

- ❖ திணைகள் அகத்திணைப் புறத்திணை என இரண்டு பாகுபாடுகளைக் கொண்டுள்ளது.
- ❖ ஒவ்வொரு அகத்திணைக்கும் புறத்திணைகள் உண்டு.
- ❖ அகத்திணையில் சுட்டி ஒருவர் பெயர் கூறப்படாது.
- ❖ அகத்திணைக்கு அகப்புறமும், புறத்திணைக்கு புறப்புறமாகிய திணை, துறைகள் உண்டு.
- ❖ அகத்திணை களவு, கற்பு என்ற கைக்கோள் கோட்பாட்டினைக் கொண்டது.
- ❖ அகத்திணை, புறத்திணை உலகியல் வழக்கு, நாடக வழக்கு, புலனெறி வழக்கு போன்ற இலக்கிய நெறிகளைப் பெறும்.
- ❖ புறத்திணைகள் அகத்திணைகளுக்குரிய முதல், கருப்பொருட்களைப் பெறும்.

## குறிஞ்சி சொல்லாட்சியின் வரலாறு

திணைப்பெயர் ஒவ்வொன்றும் பெயர்க்காரணத்தைக் கருதி வந்தது. குருகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல் மருதம் எனவும், முல்லுதல் முல்லை எனவும். பற்றுதல் பாலை எனவும் நெய்வது நெய்தல் எனவும் கூறுவர். குறிஞ்சி என்பது குறி என்பதன் அடிப்படையாக வந்தது. குறி, அடையாளம், காலம், அளவு, தடவை என்று பொருள்படும். பல்லாண்டுக்கால அளவைக் குறிக்கும் பூ, அப்பூப் பூக்கும் செடி, அச்செடி இயற்கையாக வளரும் மலை. மலைசார்ந்த இடம் குறிஞ்சி என விளக்கினர். குறிஞ்சி என்னும் சொல் குறு + இஞ்சி என்று பாகுபடும். குறு என்பது குறுகல் எனப்படும். பரவலாக பொருள் அந்நிலையிள்ளும் சுருங்குதலைக் குறுகுதல் என்பர். இஞ்சி என்பது இடம் மலை என்றும் பொருள்படும். நானிலத்தில் குறுகுதலான நிலம் எதுவெனில் மலையும் மலைச்சார்ந்த இடமாகும். குறிஞ்சி நிலமே மக்கள் ஆதியில் வாழ்ந்த இடம் என்று வேலுப்பிள்ளை கூறுகிறார்.

## குறிஞ்சி - பெயர்க்காரணம்

குறிஞ்சி என்பது நிலத்தாற் பெற்ற பெயரா அல்லது பூவால் பெற்ற பெயரா அல்லது ஒழுக்கத்திற்கான பெயரா அல்லது உலகத்தார் வழங்கிய பெயரா என அனைவருக்கும் ஐயம் ஏற்படும். ஆனால் இளம்பூரனார் குறிஞ்சி என்பது பூவாற் பெற்ற பெயர் என்ற கொள்கைக்கு வித்திட்டார். இந்த பூ பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும். குறிஞ்சிப் பூவானது மலைப் பக்கங்களில் கார் காலத்தில் தான் பூக்கும் அதன் தண்டு கருமை நிறத்திலும் காம்பு வலிமையற்றும் காணப்படும். மிக நறுமணம் கொண்ட மலராகவும் விளங்குகின்றது.

"கருங்காற் குறிஞ்சி மதனில் வான் பூ" கரிய காம்பையுடைய வன்மையில்லாத மெல்லிய குறிஞ்சிப் பூ மலர்ந்து விளங்கும் நிலமே குறிஞ்சி நிலமாகும் (Balasubramanian, 2007).

## மலை இடங்கள்

மலை என்னும் சொல்லை வடமொழிச் சொல் என்று கருதுவர். இச்சொல் திராவிட மொழிக்குரிய சொல்லாகும். இன்றைக்கும் திராவிட மொழிக் குடும்பத்துக்கும். பிற இந்திய மொழிகளிலும் இச்சொல் வழங்கப்பட்டு வருகிறது. ஆப்கானியத்திலும் ஈரானியத்திலும் மலை என்ற சொல்லே வழக்கில் உள்ளதாக எடுத்துக்காட்டுவர். கால்டுவெல் தம்முடைய ஒப்பிலக்கண நூலில் கிரேக்க அரேபிய நிலவியல் "வல்லாா் மலை" என்ற சொல்லைக் பயன்படுத்தியதாகக் குறிப்பிடுவர். மலை நிலமாகிய குறிஞ்சி என்ற பெயரில் அமைந்து ஊரின் பெயர் சிறுகுடி என்று ஒரு குறிப்பு காணப்படுகிறது. மலை என்ற சொல் பொதுவாக வழங்கப்பட்டு வருவதனை இலக்கியத்தில் காணலாம்.

## மலையைக் குறிக்கும் சொற்கள்

கோடு, குவடு, கல், துறுகல், பிறங்கல், அறை. பொருப்பு, அடுக்கம், கவாஅன், சிலம்பு, குன்றம், வெற்பு, வரை, மலை, என்று மலையைக் குறிக்கும் சொல் பல்வேறு சொல்லாகக் காணப்படுகிறது. மலையைக் விலங்கல், சிலம்பு, பொறை, அடுக்கல், விண்டு, சீமையம், கோ, நவிரம், வெற்பு, பொங்கர்,

பறம்பு, குவடு, குன்று, ஓதி, ஓங்கல், பிறங்கல், கல், வரை, பொகுட்டு, சாரல், பொற்றை என்பனவற்றைச் சிறப்புப் பெயராகவும் பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. இவற்றில் விலங்கல், சிலம்பு, பொறை, அடுக்கல், சிமையம், வெற்பு, குன்று, ஓங்கல், பிறங்கல், கல், வரை, சாரல், சிறுநெறி, இயவு, மான்அதர் என்னும் மலைநெறிகளும், நீத்தம், கான்யாறு, அயம், அருவி, குழி, சுனை, துறை முதலிய நீர் இடங்களில் படப்பை, பந்தர், பொய்கை, பொழிதல், துடவை, சோலை, சாரல் முதலிய பிற பகுதிகளும் இயற்கையிடங்களாக விளங்குகிறது. வெறிக்களம், முன்றில், ஆவணம், மறுகு, சேரிப் பாக்கம், புறவு (புறக்குடி) சிறுகுடி, சிற்றூர், நல்லூர், மூதூர், சீறூர் முதலிய இயற்கை இடங்களாக விளங்குகின்றது. ஆகிய சொற்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. சிறு மலையினைக் குன்று, பொற்றை, குவடு, குறும்பொறை, இறும்பு ஆகிய சொற்களால் அழைப்பர்.

## முதற்பொருள் - விளக்கம்

இயற்கையுடன் இணைந்து வாழ்வை நடத்திய பண்டையத் தமிழர்கள் தம் வாழ்க்கை உண்மைகளைப் புலனெறி வழக்கிலும் அக புறப்பகுப்பிலும் முதல், கரு, உரி என்னும் முப்பொருள் பின்னணியில் உணர்த்துகின்றனர்.

“முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நுவலுங் காலை முறை சிறந்தனவே

பாடலுட் பயின்றவை நாடுங் காலை”

என்ற தொல்காப்பியர் நூற்பா அகநோக்கும் அழகு நோக்கும் இயற்கையை நோக்கோடும் தெளிவுபடுத்துகிறது (Ilampuranar, 2005).

## முதற்பொருள்

தமிழ் இலக்கணத்தில் முதற்பொருள் என்ற சொற்களில் உணரப்படும் மூன்று பொருள் வகைகளுள் ஒன்றாகும். முதற்பொருள் இரண்டு வகைப்படும். இவை காலம், நிலம் என இருவகைப்படும். நிலம் என்பதனுள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் காலம் என்பதனுள் மாத்திரை, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, ஆண்டு, உகம் என்னும் பல வகையானவையும் அடங்கும்.

### நிலம்

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். “சேயோன் மேய மைவரை உலகம்” எனத் தொல்காப்பியம் குறிப்பிடும்.

## பொழுது

திணைக்குரிய பெரும்பொழுது கூதிர்காலம் ஆகும். முன்பனி காலமும் இதற்குரிய காலம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். யாமம் என்னும் சிறுபொழுதும் குறிஞ்சி நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.

### உரிப்பொருள்

குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் தொடர்பான முன்பின் நிகழ்வுகளும் ஆகும்.

“சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை அன்ன

நலம்பெறு கையின் என் கண்புதைத் தோயே

பாயல் இன்துணை யாகிய பணைத்தோள்

தோகை மாட்சிய மடந்தை

நீ அலது உளரோ என் நெஞ்சமர்ந் தோரே"

என்ற பாடல் தலைவியைக் கூடுவதற்குப் பகற்பொழுதில், பகற் குறியில் வந்த தலைமகன் பின்னால் அவன் அறியாமல் வந்து அவள் கைகளில் கண்களைப் பொத்தியபோது தலைவன் பேசும் நிகழ்வை உரிப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது (Somasundharanar, 2009).

## கருப்பொருள்

மலையும் மலைசார்ந்த நிலமாகிய குறிஞ்சியில் அந்நிலம் சார்ந்த சூழல்களுக்கு ஏற்பவே உயிரின் வாழ்வியல் அமைந்துள்ளது. மலைசார்ந்த உணவும், நீரும், மரமும் தொழிலும் பிறவும் அமைந்துள்ளது. இலக்கணம் வகுத்தோர் நிலம் சார்ந்த உயிருள்ள உயிரற்ற பொருட்களைக் கருப்பொருளாகக் குறிப்பிட்டனர். அவ்வகையில் குறிஞ்சியின் கருப்பொருளும் பதினான்காக அமைகிறது. அவை தெய்வம் தொடங்கி தொழில் வரைக்குமாக ஐந்திணைகளுக்கு ஏற்ப வெவ்வேறாக அமைகின்றன.

## தெய்வம்

கருப்பொருளின் முதலாவதாக அமைவது அந்நிலம் சார்ந்த தெய்வமாகும். தமிழ்ச் சமூகத்தில் முதன்மையான பல செயல்பாடுகளில் தெய்வச்சிந்தனைகள் மேலோங்கிய வண்ணம் இருந்து வருகிறது. குறிஞ்சி நிலத்தின் கடவுளான முருகன் குறிஞ்சி நிலத்தில் மக்களின் வாழ்வியலில் முதன்மையான நிலைமையைப் பெறுகிறார்.

"கறிவாளர் சிலம்பிற் கடவுட் பேணி

அறியாவேலன் வெறி எனக் கூறும்"

என குறிஞ்சியின் கடவுள் முருகனை வழிபட்டனர் என்பதை ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது (Somasundharanar, 2009).

## உயர்ந்தோர்

சமூக வாழ்வில் உயர்ந்தோர் அல்லோர் என்ற நிலைப்பாடும் காலங்காலமாக இச்சமூகத்தில் நிலவி வருகின்றது.

"ஓங்கித் தோன்றும் உயர்வரை

வான் தோய் வெற்பன் வந்தமாறே"

வெற்பு என்பது மலையைக் குறிக்கும் சொல்லாகும். வெற்பன் என்னும் தலைவன் மலைப்பகுதியான குறிஞ்சியைச் சார்ந்தவன் என்னும் பொருளில் அமைகிறது (Jeyabal, 2004).

## அல்லோர்

குறிஞ்சி நிலத்தின் அல்லோரை குறவன், குறத்தியர் கானவர், இடையர், இடச்சியர், ஆயர், ஆச்சியர் என குறிப்பிடுகின்றனர்.

## புள்

கிளி, மயில்

குறிஞ்சி நிலத்தில் கிள்ளை என்னும் பெயர் பெறும் கிளிகள் முதன்மையான புள்ளினமாகும்.

“வெள்ள வரம்பின் ஊழி போகியும்

கிள்ளை வாழிய பலவே”

“மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிர”

குறிஞ்சி நிலத்தில் கிளி, மயில் போன்ற பறவைகள் காணப்படுவதை ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது (Somasundharanar, 2009).

## விலங்கு

புலி, யானை

“ஆகொள் வயப்புலி ஆகும் அஃகு”

“மராஅ யானை மதம்தப ஒற்றி”

குறிஞ்சி நிலத்தில் புலி யானை போன்ற விலங்குகள் காணப்படுவதை அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது (Jeyabal, 2004).

## ஊர்

ஒவ்வொரு திணைகளுக்கு ஒவ்வொரு ஊர் பெயர்கள் கொண்டு அழைத்தனர். குறிஞ்சி நிலத்திற்கு ‘சிறுகுடி’ என்று பெயரிட்டனர். இதனை,

“சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்”

என குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது (Nagarasan, 2007).

## நீர்நிலை

உயிரினங்களின் வாழ்விற்கு நீர் ஆதாரமாகும் குறிஞ்சித் திணை சார்ந்த மக்கள் தங்களின் நீர் நிலைக்கு ஏற்ப பெயரிட்டு அழைத்தனர்.

## அருவி நீர்

“துணி நீர் அருவிநம்மோடு ஆடல்”

குறிஞ்சி நிலத்திற்குரிய நீர் நிலையாகக் கருதக்கூடிய அருவி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது (Somasundharanar, 2009).

## பூ மரம்

சந்தனமரம், காந்தள் பூ

“குன்றக் குறவன் ஆரம் அறுத்து என

நறும் புகை சூழ்ந்த காந்தள் நாறும்”

குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளான பூ, மரம் பற்றி ஐங்குறுநூறு பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம் (Somasundharanar, 2009).

## உணவு

குறிஞ்சி நிலத்தின் உணவில் தினையும் அமைகிறது. அத்தினையுணவு அந்நிலம் சார்ந்த மக்கள் மட்டுமின்றி ஏனைய உயிரினங்களுக்கும் உணவாகப் பயன்படுகிறது.

"வளமலைச் சிறுதிணை உணீ இ கானவர்"

மலைப்பகுதிற்குரிய உணவு பயிராகத் தினைகள் விளைந்திருப்பது இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது (Somasundharanar, 2009).

### பறை

முரசு, முழவு, பறை, துடி முதலியன அக்காலத்தில் இருந்த தோற்கருவியாகும். குறிஞ்சி நில மக்கள் தொண்டகப் பறை அடித்தச் செய்தியைக் கபிலர் அகநானூற்றில் குறிப்பிட்டுள்ளார். இதனை,

"தொண்டகப் பறைசீர் பெண்டிரொடு விரைஇ"

என இசையின் மீது இருந்த ஈடுபாட்டையும் மரபு வழியாகத் தொண்டகப்பறையைக் குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்தினர் (Jeyabal, 2004).

### யாழ்

குறிஞ்சி நில மக்கள் குறிஞ்சியாழ் பயன்படுத்தினர்.

"முழவு சேர் நரம்பின் இம்மெனெ இமிரும்" (Jeyabal, 2004)

### குறிஞ்சிப்பண்

குறிஞ்சி நிலத்தின் பண் குறிஞ்சிப் பண் ஆகும்.

"நைவளம் படுநிலபாலை இல்லோன்

கைகவர் நரம்பின் இம்மென இளிரும்"

குறிஞ்சிப்பாட்டில் குறிஞ்சி நிலப்பண் பற்றித் தனிப்பண் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பண்ணை வெறியாட்டுக்கும் வேட்டம் போவதற்கும் பாடுவாரெனத் தெரிகிறது (Nagarasan, 2007).

### தொழில்

குறிஞ்சி நிலத்தில் முக்கிய தொழிலான தினைகாத்தல். மலைநெல் விதைத்தல், கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல் போன்ற முக்கிய தொழிலாக கருதப்படுகின்றது.

"ஏனல் அம் சிறுதிணை காக்கும் சேனோம்

ஞெகிழியின் பெயர்ந்த நெடுநல் யானை

வான் தோய் வெற்பன் மணவாஊங்கே"

என்ற பாடல் திணைப்புனத்தில் உள்ள தினையைக் காக்க பரண்மேல் இருக்கும் குறவன் கொளுத்திய கொள்ளிக் கட்டையைக் கண்டு அஞ்சி யானைகள் மிரண்டுச் செல்லும் இது போன்ற பல்வேறு தொழில்களில் குறிஞ்சி நில மக்கள் ஈடுபட்டுள்ளனர் (Nagarasan, 2007).

இயற்கையின்றி மனிதன் வாழ இயலாது என்பதைப் போல இயற்கையாய் விளங்கும் கருப்பொருட்களில் இன்றி காதலை விளங்கிட இயலாது. அந்த வகையில் குறிஞ்சித் திணையின் கருப்பொருட்கள் திணை சார்ந்த வெளிப்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றன.

### முடிவுரை

திணை என்பது ஒழுக்கம் என்று பொருள் கொள்ளப்பட்டது. அது முப்பொருள்களில் உரிப்பொருளாக அமைந்துள்ளது. ஏனெனில் உரி என்றால் ஒழுக்கத்தைக் குறிக்கிறது என்பர். ஐந்திணை

மக்களின் ஒழுக்கத்தைக் குறிப்பதால் உரிப்பொருள் எனப் பெயர்ப் பெற்றிருக்கலாம். தொல்காப்பியர் ஒரு திணை மக்களின் வாழ்வியலை வகுக்க முதல், கரு உரிப்பொருளின் பின்னணியோடு வகுத்தார். அதனால் அவைகளுக்கு அகப்பாட்டுப்பொருள் என்ற திணைக்கோட்பாட்டை வகுத்துள்ளார். அன்பின் அகத்திணைகள் ஐந்து எனவும் அதற்கு எதிர் சூழல் அமைந்த போர் நிலைகளை புறத்திணை ஏழு என்று குறிப்பிடுகிறார். குறிஞ்சி திணைக் கோட்பாடு மலரின் பெயரளவில் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதைக் இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

## References


Balasubramanian, K.V. (2007) Natrinai (Moolamum Uraiyum), New Century Book House, Chennai, India.

Ganeshwari, P. (2021) Religious Theory in the Thinai Grammar, International Research Journal of Tamil, 3(S-2), 117-121. https://doi.org/10.34256/irjt21s223

Ilampuranar, (2005) Tholkappiyam agathinaiyal Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Jeyabal, R. (2004) Agananooru (Mulamun Uraium), New Century Book House, Chennai, India.

Nagarasan, V. (2007) Kurunthogai, New Century Book House, Chennai, India.

Sivamani, K. (2022) Tolkappiyam in Comparative Perspective - Purapporul Venbamaalai Vetchi Thinai, International Research Journal of Tamil, 4(SPL 2), 139-143. https://doi.org/10.34256/irjt22s221

Somasundharanar, P.V. (2009) Ainkurunuru Mulamum Uraiyum, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, India.

Vijayalakshmi, T. (2020) Concept of Agaththinai and Puraththinai, International Research Journal of Tamil, 3(1), 32-41. https://doi.org/10.34256/irjt2114



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License